பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 04 செவ்வாய்க்கிழமை 18.06.2024 கதிர் 223

# வரிச் சுனாமியை மக்களின் மீது கட்டவிழ்த்துள்ளது ரணில் ஆட்சி

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

**சர்வதேச நாணய நிதியத்தைச் சாட்டாக வைத்து வரிச் சுனாமியை மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது ஆளும்தரப்புஎன்றுஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.இதனால்வாடகை வீடுகளுக்கும்கூடவரிவிதிக்கத் திட்டமிட்டுள்ளதுஎன்றும்அவர் தெரிவித்தார்.** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இனவாதத்தை மட்டுமே தமது அரசியல் முதலீடாகக் கொண்டிருக்கக்கூடிய விமல் வீரவன்ஸவும்உதயகம்பன்பிலவும் இந்தத் தேர்தல் காலத்தில் தனித்து விடப்பட்டிருக்கின்றார்கள். ரணில் தரப்போ, சஜித் தரப்போ, ஜேவிபி தரப்போ அவர்களைத் தமது அணியோடு சேர்த்துக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த மூன்று தரப்புக்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாத வாக்குகள் தேவையாக இருக்கின்றபோதும் இனவாதிகளைத்தமதுகூட்டணிக்குள் சேர்த்துக்கொண்டு அதன் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்பது அதற்குக் காரணம்.

இப்படித்தனித்துவிடப்பட்டவிமல் வீரவன்ஸவும் கம்பன்பிவலவும் சேர்ந்துதாமாகஒருபுதியகூட்டணியை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் சுதந்திரக் கட்சியுடன்சேர்ந்து ஹெலிக்கொப்டர் கூட்டணிஒன்றைஉருவாக்கினார்கள். ஆனால், அது சில வாரங்கள்கூட நிலைக்கவில்லை.சுதந்திரக்கட்சியின் அப்போதையதலைவர்மைத்திரிபால சிறிசேன இந்தக் கூட்டிலிருந்து வெளியேறிவிட்டமைதான் ☞ 2

யார் ஆட்சிக்கு வந்தாலும்

## நாணய நிதிய ஒத்துழைப்பின்றி 2 வாரங்கள்கூட தாங்கமாட்டார்

இப்படிச் சொல்கிறார் அமைச்சர் பந்துல

இலங்கையில்இனிமேல் ஆட்சிக்கு வருபவர்கள் எவராக இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின்றி 2 வாரங்கள்கூடத் தாக்குப்பிடிக்க முடியாது என்றுஅமைச்சர்கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் தொடருந்துப் போக்குவரத்தின் தொடக்கத்தின் பின்னர் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யார் நாட்டின் ஜனாதிபதியாக வந்தாலும், யாருடைய தலைமையின் கீழ் நாட்டின் நிர்வாகம் முன்னெடுக்கப் பட்டாலும் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்திற்கு ஒத்துழைப் பின்றி நாட்டைநடத்திச் செல்வார்களாயின் அவர்களால் ☞ 2

## மக்கள் போராட்டத்தின் இறுதி அரைவாசி எஞ்சியிருக்கிறது

தேசிய மக்கள் சக்தித் தலைவர் லண்டனில் தெரிவிப்பு

இலங்கைஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் இறுதி அரைவாசிஎஞ்சியிருக்கிறது. நாடாளுமன்றமும் கலைக்கப்பட வேண்டுமென்பது இந்தப் போராட்டத்தில் எமது நிலைப்பாடாக அமைந்தது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

லண்டனுக்குச் சென்றுள்ள அவர் அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அங்குஅவர்மேலும்தெரிவித்ததாவது:

நீங்கள்எம்மீதுநம்பிக்கை வைத்தே இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளீர்கள். இந்த நம்பிக்கையைதுளியேனும் நாங்கள்சிதைக்கமாட்டோம் என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

நீங்கள்எமக்காகதோற்றுவீர்களாயின் உங்களின் நன்மதிப்பினை பாதுகாக்க நாங்கள் கடப்பாடு கொண்டுள்ளோம். உங்களுக்கும் எம்மனைவருக்கும் இருப்பது கூட்டான தேவை. ஆட்சியில்மாற்றமொன்றைக் கொண்டுவருவதற்கான தேவை.

நீங்களும் நாங்களும் ஒரே நோக்கத்தில் பயணிக்கின்றகூட்டானமனிதசமுதாயமாகும். உங்கள் மனதில் எமதுநாட்டைமாற்றியமைப்பதற்காக இருக்கின்ற தேவையைஅதற்குஇணையாக விளங்கிக்கொண்டவர்களே நாங்கள்.

அண்மைக்கால ☞ 2

அமைதி நடவடிக்கையாக

## இலங்கைக்கு வருகிறது சீன இராணுவக் கப்பல்

சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படை மருத்துவமனைக் கப்பல் 'பீஸ் ஆர்க்' (அமைதிப் பேழை) கிழக்கு சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தில் உள்ள சூஷானின் இராணுவத் துறைமுகத்திலிருந்து 'மிஷன் ஹார்மனி' -(அமைதி நடவடிக்கை) 2024 க்காக புறப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் தனது பயணத்தின்போது, இலங்கை உட்பட 13 நாடுகளுக்குப்பயணம்செய்யவுள்ளது. 2008 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கப்பலின் இந்த நல்லிணக்கப் பயணம் 10ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

இக்கப்பலில் ☞ 2

## இலங்கை - சீன ராஜதந்திர ஆலோசனைக் கூட்டம்

தலைநகர் பீஜிங்கில் தொடங்கியது

இலங்கை மற்றும் சீனாவின் 13ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைக் குழு கூட்டம் நேற்று சீனாவின் தலைநகர் பீஜிங்கில்தொடங்கியது.

அயலுறவுத்துறை அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன இலங்கை தூதுக்குழுவிற்கு தலைமை தாங்குவதோடு, சீனாவுக்கான வெளியுறவுத் துறை துணை அமைச்சர் சன் வெய்டாங்குடன் கலந்துரையாடல்களுக்கும் தலைமை வகிக்கவுள்ளார். ☞ 2

## ரணில், சஜித், அனுரகுமார எல்லோரும் ஒரே விசம்தான்

கம்பன்பில சாட்டையடி

ரணில், சஜித், அனுரகுமாரஆகியோர் வெவ்வேறுநிறங்களில் இருந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரே விதமான விசம்தான் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற சர்வஜன அதிகாரம்கூட்டணியின்செய்தியாளர்கள் சந்திப் பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## இலங்கை – இந்தியா இடையே விரைவில் பாலம் அமையும்

மன்னார் ஆயரிடம் ரணில் உறுதிமொழி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் விரைவில் பாலம் அமைக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதன்னிடம் கூறினார்என்றுமன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைதெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் ☞ 2

## தரம் 5 புலமைப் பரீட்சை புள்ளியிடலில் மாற்றம்

விளக்கினார் அமைச்சர் சுசில்

புதிய கல்வி மறுசீரமைப்பின்படி தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் போது பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்படும்புள்ளிகள் மாத்திரமன்றி 30 வீத புள்ளிகள் 04 - -05ஆம் வகுப்புகளில் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளை அடிப்படையாகவைத்தே வழங்கப்படுமெனகல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அதனைமுறையாக மதிப்பீடு செய்வது ஆசிரியர்களின்பொறுப்பு என்பதுடன் பாடசாலை சபைமூலம்அவை ☞ 2

## மருந்துகளுக்கு நியாய விலை வழங்க கணக்காய்வு திணைக்களம் பரிந்துரை

மக்களுக்கு நியாயமானவிலையில்மருந்துகளை வழங்குமாறு சுகாதாரஅதிகாரிகளுக்கு கணக்காய்வாளர் திணைக்களம்பரிந்துரை செய்துள்ளது.

திணைக்களம் அனுப்பி வைத்துள்ள தணிக்கைஅறிக்கையின் மூலம் திணைக்களம் இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளது.

மருந்துகளின் விலை நிர்ணயம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்பில் உள்ள சிக்கல்களை சரிசெய்ய வேண்டும் என்றும் குறித்த அறிக்கை ☞ 2

## இழுவைமடிப் படகுகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து

## இந்தியத் துணைத் தூதரகம் முன் குடாநாட்டில் இன்று ஆர்ப்பாட்டம்

இந்தியஇழுவைமடி படகுகளின்அத்துமீறல் செயற்பாட்டை தடுத்து நிறுத்த கோரி இன்று யாழ்ப்பாணத்தில் உள்ளஇந்தியதுணைத் தூதரகம் முன்பாக இன்றுஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று யாழ்ப்பாணக் கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர். ☞ 8

## முல்லைத்தீவில் சிங்கள மக்களுக்கு காணி ஆனால் தமிழர்களுக்கு காணிகள் இல்லை

வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

முல்லைத்தீவுமாவட்டத்தில்மணலாறுஎன்ற இடம் வெலிஓயாவாக மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து 4,238 சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மாவட்டத்தில் உள்ள 3,389 தமிழ் குடும்பங்களுக்கு காணிகள் இல்லைஎன முன்னாள்வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்று ☞ 2

## இனி இது .....

அதற்குக் காரணம்.

இந்த நிலைமையில் விமல் வீரவன்ஸவும் உதய கம்பனபிலவும் புதிய கூட்டணியை அமைத்துள்ளனர். அதன் முதலாவது கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு நுகேகொடவில் நடைபெறவுள்ளது. "69 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பை மீண்டும் உயிர்ப்பிப்போம்" எனும் தொனிப்பொருளில் சர்வஜன அதிகாரத்தின் முதலாவது மக்கள் கூட்டம் இன்றையதினம் 2 மணிக்கு நுகேகொடவில் நடைபெறவுள்ளது.

இதுதொடர்பில் நேற்றையதினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர். பங்காளிகளில் ஒருவரான தேசிய சுதந்திரமுன்னணியின் தலைவர் விமல்வீரவன்ச அங்கு கருத்துத் தெரிவித்தபோது, நாட்டில் 69 இலட்சம் மக்கள் கோட்டாபயவுக்கு ஆணை வழங்கினார்கள். மாற்றத்தினை எதிர்பார்து அந்த ஆணையை வழங்கினார்கள். இளைஞர்கள் சுவர்களின் ஓவியங்களை எதிர்பார்ப்புடன் வரைந்தார்கள். ஆனால் அந்த ஆட்சிக்கு எதிரான சதிச் செயற்பாடுகளால் ஆட்சி பலவீனமாகியது. மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவடையவில்லை. ஆகவே அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை புறமொதுக்காது பாதுகாக்கவேண்டிய கடமை எமக்குள்ளது" என்றார்.

அதற்காகவே அரசியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தினை பூர்த்தி செய்வதற்காகவே சர்வஜன அதிகாரம் என்ற பெயரில் தாம் ஒன்றிணைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார். இந்தக் கூட்டணி தேர்தல் களத்தில் இனவாதத் தீயை மீண்டும் பற்றவைத்துப் பரப்பும் வேகத்தைப் பொறுத்தே பிரதான வேட்பாளர்களின் தேர்தல் நிலைப்பாடுகளும் அமையவுள்ளன என்று எதிர்பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வரிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 243 ஆவது ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை கொழும்பு, கெஸ்பேவ, இரத்தினபிட்டிய ஆனந்த புதிய மாதிரி கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தில் மீள முடியாத அழுத்தம் உருவெடுத்து மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மக்கள் வறுமையில் வாடினாலும் வரிக்கு மேல் வரி விதிக்கும் வரிச் சுனாமி நின்றபாடில்லை. சர்வதேச நாணய நிதியம் கூறியதாகத் தெரிவித்து வாடகை வீட்டிற்கும் வரி விதிக்கும் சூத்திரத்தை ஆளும்தரப்பு உருவாக்கி வருகிறது. சர்வதேச நாணய நிதியம் சொல்வதை எல்லாம் செய்வதற்கு இந்த ஆளும்த ரப்புக்கு மக்கள் ஆணை வழங்கப்படவில்லை. ஆளும்தரப்பு வினைதிறன்மிக்கதாக இருந்தால், மக்களுக்காக நல்லதொரு உடன்பாட்டை எட்டியிருக்க முடியும். அதற்கான வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறானஎதுவும் நடக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடும் பொம்மை ஆட்சியே நாட்டில் உள்ளது. இந்த ஆளும்தரப்பு வரி சுனாமியை மக்களின் தோள்களில் சுமத்தியுள்ளது எமது நாட்டின் இறையாண்மையை நாங்கள் யாருக்கும் விற்கவில்லை. நல்ல நிலையிலிருந்து, நல்லதொரு கலந்துரையாடலுக்குச் சென்றால் மக்கள் தரப்பில் செய்ய வேண்டியதைச் சரியாகச் செயல்படுத்த முடியும்.

மக்களின் அழுத்தத்தைக் குறைத்து, மக்களின் அசௌகரியங்களைக் குறைப்பதன் மூலம், ஒடுக்குமுறையான மக்கள் வாழ்க்கையை உருவாக்காமல் நல்ல ஆக்கப்பூர்வமான உடன்பாட்டை எட்ட முடியும். என்றாலும், இன்று பொம்மை ஆளும் தரப்பே காணப்படுவதால் இந்த யுகத்தின் அவலமாக அது மாறியுள்ளது.

எமது நாட்டிற்குச் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு தேவை. அதேநேரம் வங்குரோத்தான கோட்பாடுகளின் அடிப்படையில் நாம் செயல்பட்டால், எமது நாடு இன்னுமொரு பாதாளத்தில் விழும். நாட்டுக்குப் பெற முடியுமான சிறந்ததை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்

டிஜிட்டல் சிறீ லங்காவை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை. என்றாலும் தரம் 6 -முதல் -13 வரை சிங்களத்தில் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்படுகிறது. ஆனால் தரம் 1- முதல் 13 வரை ஆங்கிலம் மொழியில் கட்டாயப் பாடமாக இது அமைய வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். பாடசாலைகளில் நிலவிவரும் மனித வளம் மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தே இவையனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உலகின் புதிய போக்காக அமைந்து காணப்படும் பசுமைக் கல்வி, பசுமை தொழில்நுட்பம் மற்றும் பசுமையை மையமாகக் கொண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், பசுமையை மையமாகக் கொண்ட நிலையான அபிவிருத்தியில் கார்பனை வெளியேற்றும் நாடாக மாற வேண்டும் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

பசுமை அபிவிருத்தி குறித்து பலர் பேசினாலும் அது களத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒன்றாக அமையவில்லை. சகல பாடசாலைகளையும் மையமாக வைத்து, பசுமைநிலைபேறு அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும் என்றார்.

## ரணில், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் ஊதா நிறப்போத்தலை வழங்கினாலும், சஜித் பச்சை நிறப்போத்தலை வழங்கினாலும், அநுர சிவப்பு நிறப்போத்தலை வழங்கினாலும் அதனுள் காணப்படுகின்றது ஒரேவகையான விசம்தான். அதனைப் பருகினால் இலங்கைத் தாய் இறப்பாள் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

எம்முன்னால் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் சவாலும் கடமையும் என்னவென்றால் போத்தல்களில் உள்ள விசங்களை மாற்றுவது மட்டுமல்ல. அந்த போத்தல்களில் வெற்றிப்பானத்தை நிரப்ப வேண்டும் என்றார்.

## மருந்துகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிந்துரைத்தது.

இதேவேளை, மனித இம்யூனோகுளோபின் உள்ளிட்ட தரமற்ற மருந்துகளை உற்பத்தி செய்தமைக்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரைத்துள்ளார்.

அத்துடன் மருந்துகளின் தரத்தை தொடர்ந்து பேணுவதற்கான வழிமுறைகளை உருவாக்கி செயல்படுத்துமாறும் கணக்காய்வாளர் நாயகம் அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு, வர்த்தக நடவடிக்கைகள், முதலீட்டு முயற்சிகள் மற்றும் பாதுகாப்பு விடயங்களை உள்ளடக்கிய இலங்கை-சீன இருதரப்பு உறவின் பல்வேறு அம்சங்களில் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதில் இந்த நிகழ்ச்சி நிரல் கவனம் செலுத்துகின்றது.

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

வடமாகாணத்திலே 2415 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்புள்ள மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். கிட்டத்தட்ட 5 லட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை கொண்டதாக கணிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 குடும்பங்களுக்கு காணி இல்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 47 ஆயிரத்து 455 மொத்த குடும்பங்களைச் சேர்ந்த 1 லசட்சத்து 40 ஆயிரத்து 931 மக்கள் வாழ்கின்றனர். இதில் தமிழர்களுடைய பூர்வீக இடங்களில் 4557 குடியமர்த்தப்பட்ட சிங்கள குடும்பங்களை சேர்ந்த 12 ஆயிரத்து 545 பேரும், 1,675 முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 382 பேரும் 41 ஆயிரத்து 210 தமிழ் குடும்பங்களை சேர்ந்த 1 லட்சத்து 21 ஆயிரத்து 799 பேரும் காணப்படுகிறார்கள்.

இங்குள்ள 4 ஆயிரத்து 557 சிங்களக் குடும்பங்களில் பல குடும்பங்களுக்கு, தமிழ் மக்களுக்கு சொந்தமாக இருந்த பூர்வீகமான நீர்ப்பாசன குளங்கள் அதனோடு சேர்ந்த காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டே வழங்கப்பட்டிருக்கின்றது.

இதில் ஆமையன்குளம், முந்திரிகைகுளம், மறிச்சுக் கட்டி குளம் ஆகிய குளங்களையும் அதனோடு இணைந்த நிலப்பரப்புகளும் அடக்கம். சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட தமது சொந்த நிலங்களையும், குளங்களையும் தமிழ்மக்கள் ஏக்கத்தோடு பார்த்து கொண்டிருக்கும் நிலைமையை ஆட்சியாளர்கள் கொக்குத்தொடுவாய், கொக்குளாய், கருநாட்டுக் கேணியில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

2022ஆம் ஆண்டு ஆளும் தரப்பினரால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் வடக்கைச் சேர்ந்த 28,676 இளைஞர், யுவதிகள் தமக்கு ஒரு ஏக்கர் காணி வீதம் தருமாறு விண்ணப்பித்திருந்தனர். விவசாய மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவர்கள் இந்த நிலத்தைக் கேட்டிருந்தனர்.

ஆளும் தரப்பே இதற்காக விண்ணப்பிக்குமாறு அறிவித்தல் வழங்கியிருந்தது. ஆனால் இன்றுவரைக்கும் எதுவித காணிகளும் வழங்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் நடக்கவில்லை என்றார்.

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளுர்வாசிகள், சீன நிறுவனங்களில் உள்ளவர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சீனர்களுக்கு பொதுவான மற்றும் பரவலான நோய்களுக்கான இலவச நோயறிதல் மற்றும் சிகிச்சை முகாம்கள், மருத்துவ குழுக்கள் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

இந்தக் கடல்சார் மருத்துவமனையில் 100 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் செயற்படுகின்றனர். 17 மருத்துவ துறைகள் மற்றும் 5 துணை நோயறிதல் துறைகள் ஆகியனவும் காணப்படுகின்றன.

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வாரங்கள் மட்டுமே நிலைக்க முடியும்.

ஏனென்றால் தற்போது கைச்சாத்திகியுள்ள ஒப்பந்தங்களுக்கு அமைவாகவே எதிர்வரும் வரவுசெலவுத் திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும். உணவுப் பொருட்களை கொண்டுவருவதற்கும், எரிபொருட்கள், மருந்துகள் உள்ளிட்டவற்றை கொண்டு வருவதற்கும் வெளிநாட்டுப் பணத்தில் ஐந்து பில்லியன் டொலர்கள் தேவைப்படுகின்றன.

அத்துடன் நீடிக்கப்பட்ட கடன் வசிதியின் கீழ் பல்வேறு ஒத்துழைப்புக்கள் கிடைக்கவுள்ளன. ஆகவே அந்தவசதியைகைவிட்டால் நாட்டை எவ்வாறு முன்னர்த்திச் செல்வது? என்றார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னைப் பார்ப்பதற்காக ஆயர் இல்லத்துக்கு வருகை தந்திருந்தார். அவருடைய கூற்றின் பிரகாரம் மன்னாரை சிறந்த நகரமாக மாற்றுவதற்கு திட்டமிட்டிருக்கிறார் என்று கூறியிருந்தார்.

எமது அயல்நாடான இந்தியாவுடன் கிட்டிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறியிருந்தார். அந்த வகையில் மின்சாரம் மற்றும் எமக்குப் பலம் தரக்கூடிய வெவ்வேறு வகையான சக்திகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் எம்மால் உற்பத்தி செய்யக்கூடியவற்றை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கும் ஜனாதிபதி தயாராகி வருகிறார் என்று கூறியிருந்தார்.

அதேநேரம் இந்தியாவுக்கு பாலம் அமைப்போம் என்று எமது புலவர்கள் கூறியது போன்று இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் பாலம் அமைத்து விரைவில் நெருங்கிய உறவுகளையும் போக்கவரத்து ஏற்பாடுகளையும் ஆரம்பிக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார் என்றார்.

## தரம் 5....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிலாபம், நாத்தாண்டி, தம்மிஸ்ஸர மகா வித்தியாலயத்தின் புதிய மூன்று மாடிக் கட்டடமொன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப் பின்போது 01,06,10 ஆகிய வகுப்புகளை உள்ளடக்கி முன்னோடித் திட்டம் அடுத்த வருடத்தில் தொடங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் கணிதம், இரசாயன விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழி, தொழில்நுட்பம், சர்வதேச மொழிகள் ஆகிய பாடங்களுக்கு 2,500 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பட்டதாரிகள் அனைவரும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதையடுத்து அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை தற்போது நடத்தப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் மாணவர்களுக்கு திறமையான ஆசிரியர்கள் கிடைக்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக வரலாற்றில் 2022 இல் மிகவும் பலம்பொருந்திய மக்கள் எழுச்சி இடம்பெற்றது. மக்கள் தன்னிச்சையாக வீதியில் இறங்கத் தொடங்கினார்கள். இளைஞர்கள் மாதக்கணக்கில் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடினார்கள்.

வெளிநாடுகளிலுள்ள நீங்கள் அதற்கான உதவிகளை புரிந்தீர்கள். வெற்றியைப் பிரார்த்தித்தீர்கள். கோட்டாபய வீட்டுக்குச் சென்றார். போராட்டத்தின் இறுதியில் அரைவாசி எஞ்சியிருக்கிறது. நாடாளுமன்றமும் கலைக்கப்பட வேண்டுமென்பது எமது நிலைப்பாடாக அமைந்தது.

மக்களின் எதிர்ப்பு காரணமாக கோட்டாபய வீடு செல்கிறார். உலக வரலாற்றில் ஒருபோதுமே இடம்பெற்றிராதவாறு கோட்டாபயவை விரட்டியடிப்பதற்காக வந்த மக்கள் ஆணையிலேயே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகிறார்.

எமது நாட்டின் ஆட்சியென்பது திரிபடைந்தஓர் ஆட்சியதிகாரமாகும். அன்று இலட்சக்கணக்கில் மக்கள் ஆட்சியாளனுக்கு எதிராக எழுச்சிபெற்றனர். அதனை வெற்றியில் நிறைவுசெய்ய இயலாமல் போயுள்ளது. எனினும் தற்போது வாய்ப்பு வந்துள்ளது.

மக்கள் தேர்தல் வாய்ப்பு வரும்வரை அனைத்துதுன்பதுயரங்களையும் பொறுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்கவோ அவருடைய கும்பலைச் சேர்ந்த எவருமோ

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# வீதிகளை சீரமைக்க கல்முனை மாநகர சபை நடவடிக்கை எடுக்காதமை நிதி மோசடிக்கே

## இலங்கை நீதிக்கான மையம் சாடல்



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை மாநகர சபை பகுதியில் புதிய நீர் இணைப்புக்காக மாநகர சபையின் அனுமதி பெற்று சேதமாக்கப்பட்ட கொங்கிரீட் வீதிகள் இன்னும் சீர் செய்யப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரிகங்களுக்குள்ளாகி வருகின்றனர் என்று இலங்கை நீதிக்கான மைய்யம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான மையத்தின் தலைவர் சட்டத்தரணி ஸஹ்பி எச்.இஸ்மாயில் இது விடயமாக மேலும் குறிப்பிடும் போது -

இவ்வாறான புதிய நீர் மின் இணைப்பைப் பெறும் விண்ணப்பதாரர்கள் கல்முனை மாநகர சபைக்குஏற்கனவே புதிய நீர் இணைப்புக்காக சேதம் செய்யப்படும் பாதையை செப்பம் செய்வதற்கான கட்டணத்தை கட்டிய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குள் நீர் இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் சேதம் செய்யப்பட்ட பாதைகள் மாநகர சபையால் செப்பம் செய்யப்படாமல்நெடுங்காலமாககாணப்படுகின்றது. இது மாநகர சபை கட்டளை சட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி, வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்புகளாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது, மாநகர சபையின் பிரயோசன தன்மையை கடுமையான கேள்விக்கு உட்படுத்துகிறது.



ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடி ஆகும் என நீதிக்கான மையம் சுட்டிக்காட்டி உள்ளது.

நீதிக்கான்மையம்மாநகரசபைஆணையாளருக்குஅனுப்பி வைத்த கடிதத்தில் செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததோடு மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்க தயாராகி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (05)

# சமூக செயற்பாட்டு திட்டங்களை சிறுவர்களிடம் ஊக்கத் முயற்சி






( எச் எம் ஹலால்தீன் )

பிளாஸ்டிக்முகாமைத்துவம், பிளாஸ்டிக் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான விளிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்ச்சி திருகோணமலையில் இடம் பெற்றது.

பிளாஸ்டிக் கழிவகற்றல், சமூக செயற்பாடுகளை ஊக்குவித்தல் சிறு வயதினிலிருந்து ஏற்படுத்தும் நோக்குடன் திருகோணமலை மான் பூங்காவில் ட்ரிக்கோ எய்ட் ஏற்பாட்டில் பிளாஸோமிங் எதிர்கால முன்பள்ளியின் மாணவர்களால் விளிப்புணர்வு செயற்றிட்டம் நிகழ்வு நடைபெற்றது.

இத்திட்டம் பாக்கு நீரிணையை நீந்தி கடந்த ஹரிகரன் தன்வந்த் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில்பிரதமஅதிதிகளாக கிழக்கு மாகாண சுற்றுலா துறை தவிசாளர்மதனவாசன்,சைல்வங்கா சாட்டர் சானக்க ஹமகே,ட்ரிக்கோ எய்ட்டின் நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம் நவநீதன், கிழக்கு மாகாணசுற்றுலாதுறைஊளியர்கள், திருகோணமலை நகராட்சி ஊளியர்கள், ப்ளாசமிங் ஃபியூச்சர் ப்ரீ-ஸ்கூல் இன்; இயக்குனர் பிராங் அந்தனீஸ், அதிபர் திருமதி. தாரணி அந்தனீஸ், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(05)

# தேசியப் பாடசாலைகளைப் பின்தள்ளி அல் இக்பால் முதலிடம் பெற்று சாதனை

## வவுனியா மாவட்டத்தில்

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் மாவட்ட ரீதியில் தேசிய பாடசாலைகளை பின்தள்ளி நூறு வீத சித்தியுடன் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயம் முதலிடம் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் சித்தி வீதம் தொடர்பான புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

அதில், வவுனியா மாவட்டத்தில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும், அனைத்து பாடங்களிலும் சித்தி பெற்று 100 வீத சித்தியுடன் வவுனியாவில் ஒரே ஒரு பாடசாலையாக வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த, சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகாவித்தியாலயம் சாதனை படைத்துள்ளது.

வவுனியா தெற்கு வலயத்தில் இரண்டாம் இடத்தை 92.9 வீத சித்தியைப் பெற்று பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம்பெற்றுள்ளதுடன், மூன்றாம் இடத்தை 91.9 வீத சித்தியைப் பெற்று பெரியகோமரசங்குளம் மகாவித்தியாலயம் பெற்றுள்ளது.

ஏனைய பாடசாலைகள் 90 வீதத்திற்கும் குறைவான சித்தியையே பெற்றுள்ளது. அதிலும் தேசிய பாடசாலைகளான இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி 77 வீத சித்தியுடன் வவுனியா தெற்கு வலயத்தில் 11 ஆவது நிலையையும், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம் 69.4 வீத சித்தியைப் பெற்று தெற்கு வலயத்தில் 17 ஆவது நிலையையும், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் 56.1 வீத சித்தியைப் பெற்று தெற்கு வலயத்தில் 22 ஆவது நிலையையும் பெற்றுள்ளன.

வவுனியா தெற்கு வலயத்தில இருந்து 28 பாடசாலைகளின் ஊடாக மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் 4 பாடசாலைகளே 50 வீதத்திற்கும்குறைவானசித்திகளைப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(05 - 100)

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் எந்திரியும் சாரதியும் கைது



(பாறுக் ஷிஹான்)

அக்கரைப்பற்றில் கனரக வாகனங்களின் உரிமையாளர் ஒருவரிடம், லஞ்சம் பெற முயற் சித்தார் எனும் குற்றச்சாட்டில் கைதான நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் ஒருவரையும், அவரின் வாகன சாரதியையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக் களத்தின் அக்கரைப்பற்று பிராந்திய காரியா லயத்தில் கடமை யாற்றிவரும் பொறியியலாளர் ஆக்கில்என்ப வர், தன்னிடம் 04 லட்சம் ரூபா லஞ்சம் கோருவதாக - அக்கரைப் பற்றிலுள்ள கனரக வாகனங் களின் உரிமையாளர் ஒருவர், கொழும்பிலுள்ளலஞ்சஊழல் குற்றச்சாட்டுகளைவிசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான புதன்கிழமை, அக்கரைப்பற்று பிரதேசத்திலுள்ள நீர்பாசன திணைக்களக் காரியாலயத்தில் வைத்து, நீர்ப்பாசன பொறியியலாளர் கூறியமைக்கு அமைவாக அவரின் வாகன சாரதியிடம், லஞ்சப் பணத்தில் ஒரு பகுதியாக 02 லட்சம் ரூபாவை - கனரக வாகனங்களின் உரிமையாளர் வழங்கியுள்ளார்.

இதன் போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளைவிசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் - பொறியியலாளரையும் அவரின் சாரதியையும் கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட இருவரையும் அக்கரைப் பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை முன்னிலைப் படுத்திய போது, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை, அவர்களை விளக்கமறியவில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வயல் வெளிகளிலிருந்து மண்ணை ஏற்றிக் கொண்டு செல்லும் கனரக வாகனங்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்காமலிருக்கும்பொருட்டு, குறித்த கனரக வாகனங்களின் உரிமையாளரிடம் மேற்படி பொறியியலாளர் லஞ்சம் கோரியதாகத் தெரியவருகிறது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏட்டுச் -சுரைக்காய்களா சட்டங்கள்?

இலங்கையின் வரலாற்றிலேயே அதிகளவு சட்டங்கள் இயற்றப்பட்ட காலப் பகுதியாக தற்போதைய ஆட்சிக் காலமே இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க.

‘நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சு கடந்த இரண்டு ஆண்டுகளில் சட்டச் சீர்திருத்தங்கள் தொடர்பாக பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தக்காலப்பகுதிவரலாற்றில்இடம்பிடிக்க வேண்டியதாகும். எமது அமைச்சின் விடயப்பரப்பிற்கு அமைய, 2022 இல் – 29 சட்டங்கள், 2023 இல் – 17 சட்டங்கள், 2024 இல் – 13 சட்டங்கள் என இதுவரை 59 சட்டச் சீர்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 7 வரைவுகள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இன்னும் 44 மிக முக்கியமான சட்டத் திருத்தங்களுக்கான பணிகள் கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளன. ஒவ்வொரு அமைச்சின் சட்டங்களை வகுப்பதிலிலும் நீதி அமைச்சு பெரும் பங்காற்றுகிறது” என்று தெரிவித்தார் செயலாளர்.

நல்ல விடயம்தான். பிரிட்டனின் ஆக்கிரமிப்பில் இருந்தபோது உருவான சட்டங்கள்தான் பெரும்பாலும் இலங்கையின் சட்டப் புத்தகத்தை ஆக்கிரமித்து நிற்கின்றன. அவற்றிற்கு காலப் பொருத்தமான மாற்றங்களும் புதிய தேவைகளுக்கு ஏற்ற சட்டங்களும் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கதுதான். இருப்பினும் சட்டங்களை உருவாக்குவதால் மட்டும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டிவிடாது என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.

இலங்கையின் மிகப் பெரிய குறைபாடுகளில் ஒன்று இருக்கின்ற சட்டங்களையே முறையாகப் பயன்படுத்தத் தவறுவது. அதற்கு மிகப்பெரிய உதாரணம் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டங்கள். 13ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 37 ஆண்டுகளாகிவிட்டபோது அது இன்னமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி எத்தனையோ அழுத்தங்கள், போராட்டங்கள் வழங்கப்பட்டபோதும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள் அதனைச் செய்யவேயில்லை. இப்போதும் அது நடைமுறைப்படுத்தப்படாமலேயே உள்ளது.

அதுபோன்றே மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டிருக்கவேண்டிய தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மாகாண சபைகள் மக்களின் விருப்பத்திற்கு எதிராக அரசுத் தலைவரின் பிரதிநிதியாக ஆளுநரினால் நிர்வகிக்கப்படும் நிலையே தொடர்கின்றது. உள்ளூராட்சி சபைகள் சட்டத்தை மீறி அதற்கான தேர்தல் நடத்தப்படாமலேயே தொடர்கின்றது.

இப்படி இருக்கின்ற சட்டங்களையே சரியாக, முறையாக, முழுமையாக நடைமுறைப்படுத்தாதபோது, புதிய சட்டங்களையும் புதுப்புது சட்டத் திருத்தங்களையும் கொண்டுவருவதால் மட்டும் எல்லாமும் மாறிவிடப்போவதில்லை.

”நீதித்துறையை செயற்திறன் மிக்கதாக மாற்றுவதன் மூலம் மக்கள் வழக்குகளை விரைவாக நிறைவு செய்ய முடியும். வழக்கு தொடர்பான சொத்துக்களை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். மேலும் நல்ல முதலீட்டுச் சூழல் உருவாகி வருகிறது. எனவே, சட்டத்தின் தாமதத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நேரடி தொடர்பு இருக்கிறது’’ என்றும் செயலாளர் தெரிவித்திருக்கிறார். அது உண்மையானால் சட்டத்தின் ஆட்சியை முழுமையாக நிலைநிறுத்தி சட்டங்களை முறையாக, முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல்வேண்டும். இல்லையேல் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாத நிலைதான் ஏற்படும்.

# உக்ரைனை சரணடைய கோருமா நேட்டோ?




**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

(இதுவரை மேற்கத்திய நாடுகள் எதுவும் மோதலை ஒரு முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. இப்போதும் மேற்கத்திய உலகம் ரஷ்யாவை தோற்கடிக்கவே முயலுகின்றனர். இப்போரில் ரஷ்யாவின் தோல்வியே போரை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்று நேட்டோ அமைப்பு நினைக்கிறது)

.................................................................

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ, ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைனுக்கு தொடர்ந்து பெரியளவில் உதவி செய்கின்றது. ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் பல்வேறு வகையான இலகுரக மற்றும் கனரக இராணுவ உபகரணங்கள், தாங்கி எதிர்ப்பு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகனைகள் என எல்லாவற்றையும் அள்ளி வழங்குகின்றது.

ஹோவிட்சர் ரக பீரங்கிகள் மற்றும் ட்ரோன்கள் போன்றவையும் நேட்டோ உறுப்பு நாடுகளால் உக்ரேனுக்கு தொடர்ந்து அனுப்பப்படுகின்றன.

### கண்மூடித்தனமான விநியோகம்

மேலும், அமெரிக்க பைடன் நிர்வாகம் இந்த ஆயுதங்களை கண்மூடித்தனமான முறையில் விநியோகம் செய்து வருகிறதாக சர்வதேச ஆயுத கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டரை வருடங்களுக்கும் மேலாக ரஷ்யா போரை தொடங்கியதில் இருந்து, அமெரிக்கா ஏற்கனவே சுமார் 5,500 ஜாவெலின் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கியுள்ளது.

நேட்டோ நட்பு நாடுகள் இதுவரை உக்ரைனுக்கு பில்லியன் கணக்கான டாலர்களை இராணுவ உபகரணங்களுக்காக பங்களித்துள்ளன.

இணையப் பாதுகாப்பு, இரசாயன, உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி அச்சுறுத்தல் பாதுகாப்பு உள்ளிட்ட மருத்துவ பொருட்கள் மற்றும் பிற முக்கியமான உபகரணங்களை நேட்டோ நட்பு நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து வழங்குகின்றன.

அத்துடன் மில்லியன் கணக்கான யூரோக்கள் மூலம் உக்ரைனுக்கு நிதி உதவியும் செய்து வருகின்றன. பல ஐரோப்பிய நாடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் மற்றும் மில்லியன் கணக்கான உக்ரேனிய அகதிகளுக்கும் உதவுகின்றன.

### ரஷ்ய எரிவாயு விநியோகம்:

ரஷ்யாவை வணிக ரீதியாக தண்டிப்பதற்காக, நேட்டோ உறுப்பு நாடுகள், ரஷ்யாவுடன் எரிவாயு மற்றும் எண்ணெய் வணிகத்தில் இனி வர்த்தகம் செய்ய மாட்டோம் என்று வெளிப்படையாக அறிவித்தன.

ரஷ்ய எரிவாயு கடந்த ஐந்து தசாப்தங்களாக ஜெர்மனி முழுவதும் வீடுகள், தொழில்நிறுவனங்கள், சமையல் உணவு மற்றும் தெருக்களை வெளிச்சம் ஏற்ற பயன்படுத்தப்படுகிறது. இது 2019இல் ஐரோப்பிய ஒன்றியத்தின் இயற்கை எரிவாயு இறக்குமதியில் 41% ஆகும். ஜெர்மனி மிகப்பெரிய வாடிக்கையாளர்களில் ஒன்றாகும்.

அனைத்தும் வீண் போவதாகவே தெரிகிறது. கடுமையான பொருளாதாரத் தடைகள் இருந்தபோதிலும், ரஷ்யாவின் ரூபிள் நாணயம் ஒரு அதிர்ச்சியூட்டும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 2023 ஜனவரி முதல் டொலருக்கு எதிராக ரூபிள் 40% உயர்ந்தது.

### ரஷ்யா தொடர்ந்து முன்னேற்றம்:

அதனைப்போல போரிலும் ரஷ்யா தொடர்ந்து, மெதுவாக முன்னேறி வருகிறது. கிழக்கு உக்ரைனின் பகுதிகளை ஒவ்வொன்றாக விடுவித்து ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டும் வருகிறது.

முதலில் டான்பாஸ் பகுதி முழுமையாக ரஷ்யாவால் பாதுகாக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் படையினர் மரியுபோல் நகர சரணடைவானது ரஷ்யாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதுவரை மேற்கத்திய நாடுகளால் மோதலை ஒரு முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. இப்போதும் மேற்கத்திய உலகம் ரஷ்யாவை தோற்கடிக்கவே முயலுகின்றனர்.

இப்போரில் ரஷ்யாவின் தோல்வியே0 போரை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்று நேட்டோ அமைப்பு நினைக்கிறது.

தற்போதைய போர் நெருக்கடியைத் தீர்க்க, நேட்டோ தலைவர் உக்ரேனிய அரசு மொஸ்கோவிற்கு சில பிராந்திய சலுகைகளை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

### அமைதி என்ன விலை :

மொஸ்கோவிற்கு எவ்வளவு பிரதேசத்தை விட்டுக்கொடுக்க தயாராக உள்ளது என்பதை உக்ரேன் தெளிவாக புரிந்து கொண்டால் மட்டுமே சமாதானப் பேச்சு பயனுள்ளதாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார். அதனாலேயே அமைதி சாத்தியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

‘அமைதிக்கு நீங்கள் என்ன விலை கொடுக்க தயாராக இருக்கிறீர்கள் என்பதுதான் ஒரே கேள்வி? எவ்வளவு பிரதேசம், எவ்வளவு சுதந்திரம், எவ்வளவு இறையாண்மை... அமைதிக்காக நீங்கள் தியாகம் செய்யத் தயாரா? என நேட்டோ பொதுச்செயலாளர் ஸ்டோலன்பெர்க் கேட்டுள்ளார்.

நேட்டோ பொதுச்செயலாளர் ஸ்டோலன்பெர்க் கூற்றின்படி பார்த்தால், உலகின் மிகப் பெரிய இராணுவக் கூட்டணியான நேட்டோவின் தோல்வியை அப்பட்டமாக ஒப்புக்கொள்வதாகவே புலப்படும். இவரின் அறிவிப்பின் பின் விளைவாக உக்ரைன் சந்தேகத்திற்கு இடமின்றி நடுங்க வேண்டி உள்ளது.

நேட்டோ நாடுகளிடம் இருந்து பெற்ற பெரும் உதவிகள் இறுதியில் முடிவுக்கு வரும் என்பதை ஜெலென்ஸ்கி உணர்ந்திருக்க வேண்டிய காலம் நெருங்கி வந்து விட்டதாகவே அறியலாம்.

நேட்டோநாடுகள்நீண்டகாலமாகஉக்ரைனுக்கு நிரந்தரமாக உதவ முடியாது. எனவே, ரஷ்யாவிடம் கிழக்கு பகுதியை ஒப்படைக்காத வரை போரை நிறுத்த முடியாது என்றும் , அமைதியை உருவாக்க முடியாது என்பதை இப்போது ஜெலென்ஸ்கி உணர்ந்தால் மிக்க நல்லது எனவும் நேட்டோ பொதுச்செயலாளர் ஸ்டோலன்பெர்க் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# ரஜினிகாந்தை சந்தித்த செந்தில் தொண்டமான்



( எச் எம் ஹலால்தீன் )

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விஜயவாடாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை சந்தித்தார்.

இலங்கையில் உள்ள தோட்ட சமூகத்தின் 200 ஆவது ஆண்டுக்கான நினைவு முத்திரையை சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்திற்கு வழங்கி வைத்தார்.(05)

# கராத்தே சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

ஸ்ரீ லங்கா கராத்தே தோ சம்மேளனத்தின் கிழக்கு மாகாணம் மற்றும் அதனுள் அடங்குகின்ற அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும், நிருவாகத் தெரிவும் திருகோணமலையின் சீனாங்குடாவில் உள்ள நாலந்தா மகா வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

இதில் மாகாண மற்றும் மாவட்டங்களின் பதவிக்கான உத்தியோகத்தர்கள் யாப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். (05)

# கதிர்காம பாதயாத்திரீகர்கள் அம்பாறைக்குள் பிரவேசம்







( வி.ரி சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச்சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 35 ஆவது நாளில் இயந்திரப் படகுப் பாதையில் பயணித்து களுவாஞ்சிக்குடி ஊடாக அம்பாறை மாவட்டத்தை அடைந்துள்ளனர்.

மண்டூர் – குறுமண்வெளி இயந்திரப் படகுப் பாதையில் பாதயாத்திரீகர்கள் அநாயாசமாக பயணித்தனர்.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதி ஆலயத்திலிருந்து கடந்த மாதம் 11ஆம் திகதி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினர் ஐந்து மாவட்டங்களை கடந்து சனிக்கிழமை ஆறாவது மாவட்டமான அம்பாறை மாவட்டத்திற்குள் பிரவேசித்து இருக்கின்றார்கள்.

கடந்த 35 நாள்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

புதன்கிழமை இரவு மண்டூர் கந்தசாமி ஆலயத்தில் தரித்து நின்ற அவர்கள் சனிக்கிழமை காலை மண்டூர்-குறுமண்வெளி ஆற்றை பாதையால் கடந்துவந்து களுவாஞ்சிக்குடியை அடைந்தனர் .

கல்லாறு கடலாச்சி அம்மன் ஆலயத்தை தரிசித்து இரவு பெரிய நீலாவணை நாககன்னி ஆலயத்தில் நின்றனர். ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஊடாக காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடைந்தனர் .

எதிர்வரும் 29 ஆம் திகதி உகந்தை மலையை அடைய இருக்கின்றார்கள். 30 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசிய ஈட்டி எறிதலில் இலங்கை சாதனை



தென்கொரியாவில் நடைபெற்ற 'ஆசிய எறிதல் சம்பியன்ஷிப்' ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கை வீரர் ருமேஷ் தரங்க தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.





இப்போட்டியில் மற்றொரு இலங்கை வீரர் சுமேத ரணசிங்க வெண்கலப்பதக்கம் வென்றதுடன், பெண்களுக்கான ஈட்டி எறிதலில் நதீஷா தில்ஹானி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

தென்கொரியாவின் மெக்போ நகரில் நடைபெற்ற 2ஆவது ஆசிய எறிதல் சம்பியன்ஷிப்பில் சனிக்கிழமை நடைபெற்றது.

ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில்ருமேஷ்தரங்கபத்திரகே 85.45 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம்வென்றுள்ளார்.இதன்மூலம் புதிய இலங்கைச்சாதனையையும், புதிய போட்டிச் சாதனையையும் ருமேஷ் தரங்க படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டில் தியகமவில் நடைபெற்ற போட்டியொன்றில்சுமேதரணசிங்க 83.04 மீற்றர் எறிந்தமையே இதுவரை ஈட்டி எறிதலில் இலங்கையின்தேசியசாதனையாக இருந்தது, அந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் 2024 ஒலிம்பிக் ஆண்களுக்கானஈட்டிஎறிதல்போட்டிக்கு நேரடி தகுதி பெறுவதற்கான அடைவு மட்டம் 85.50 மீற்றர்களாகும்.எனவே,ஒலிம்பிக்அடைவுமட்டத்தை 5 சென்ரிமீற்றரால் ருமேஷ் தரங்க அடையத் தவறியுள்ளார்.

அதேவேளை, முந்தைய இலங்கைச் சாதனையாளரான சுமேத ரணசிங்கவும் ஆசிய எறிதல் சம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

33 வயதான சுமேத ரணசிங்க இப்போட்டியில் 77.57 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்தார். பாகிஸ்தானின் எம். யசீர் 78.10 மீற்றர் எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

இதேவேளை,பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கை வீராங்கனை நதீஷா தில்ஹானி லேக்கம்கே, 57.94 மீற்றர் எறிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

மற்றொரு இலங்கை வீராங்கனை டயனா ஹர்சனி 48.46 மீற்றர் எறிந்து 7ஆவது இடத்தைப் வென்றுள்ளார். இப்போட்டியில் ஜப்பானிய வீராங்கனை மோமனி உவேதா 61.32 மீற்றர் எறிந்து தங்கப் பதக்கத்தையும் சீனாவின் சூ லிங்டான் 60.06 மீற்றர் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும்வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

### மிருகங்களின் கடத்தலை முறியடித்தமைக்காக

# பொலிஸ் அதிகாரிக்கு சிவசேனை கௌரவம்

வடக்கில் இருந்து புத்தளம் மற்றும் கொழும்பு நோக்கி இரு வாகனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆடு மற்றும் மாடு என்பவற்றின் கடத்தலை முறியடித்தமைக்காக ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சிவசேனை அமைப்பு ஞாயிற்றுக்கிழமை கௌரவிப்பு வழங்கியுள்ளது.

வவுனியா, ஓமந்தைபொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக தலைமையில் ஏ9 வீதியில் விசேட சோதனை ஒன்றை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போதுஏ9வீதியூடாகபயணித்தவாகனங்களை சோதனை செய்த போது இரு வாகனங்கள் நிறுத்தாது வீதியூடாக தப்பிச் சென்றுள்ளன. விரட்டிச் சென்ற பொலிஸார் அவ்விரு வாகனங்களையும் வழிமறித்து சோதனை செய்ததில் வாகனத்தில் சட்டத்திற்கு முரணாக உரிய அனுமதிகளின்றி கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வடக்கின் கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி கடத்தப்பட்ட 70 ஆடுகளுடன் கூடிய வாகனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன், வாகனத்தில் பயணித்த இரண்டுநபர்களையும் கைது செய்துள்ளனர். மற்றைய வாகனம் வடக்கின் முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 18 மாடுகளுடன் மீட்கப்பட்டதுடன் அதனை கொண்டு சென்ற இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு சட்டவிரோதமாக கொண்டு சென்ற போது அதனை தடுத்து நிறுத்தியமையை பாராட்டி சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தவத்திரு அ.மாதவன், சு.வரதகுமார் உள்ளிட்ட அமைப்பின் பிரமுகர்கள் ஓமந்தை பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டுக்களை தெரிவித்தனர்.

(05 - 100)

# புத்தளம் எழுவன்குளம் ஊடாக மன்னார் பஸ் சேவை விரைவில்



(எம் சியாஜ்)

புத்தளத்திலிருந்து எழுவன்குளம் ஊடாக மன்னார் பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மக்களால் மிக நீண்ட நாள்களாக முன்வைக்கப்பட்டு வந்தது. இது விடயம் சம்பந்தமாக பல்வேறுமட்டங்களிலும்புத்தளம்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் ஆகியோர் பேச்சுகளை மேற்கொண்டதன் பயனாக மேற்படி புத்தளம் எழுவன்குளம் ஊடாக மன்னார் பஸ் சேவைக்கான முதற் கட்ட அனுமதி இலங்கை போக்குவரத்துசபையின்அனுமதிகிடைத்துள்ளது.

இவர்களது முயற்சியால் புத்தளம் முதல் மரிச்சிக்கட்டி(கலாஓயா பாலம்)வரை மற்றும் மரிச்சிக் கட்டி(கலாஓயா பாலம்)முதல் மன்னார் வரையான பஸ் சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதன்படி புத்தளம் எழுவன்குளம் ஊடாக புத்தளத்தில் இருந்து மரிச்சிக்கட்டி வரையான பஸ் சேவைக்கு முதற்கட்ட போக்குவரத்து சபையின் அனுமதி கிடைத்துள்ளது. எனினும் மன்னார் முதல் மடிச்சிக்கட்டி வரைக்குமான பஸ் சேவைக்கு போக்குவரத்து சபையின் அனுமதி கிடைத்தவுடன் விரைவில் புத்தளம் எழுவன்குளம் ஊடாக மன்னாருக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்படும். என தெரிவித்துள்ளனமை குறிப்பிடத்தக்கது.(05)




காலைக்கதிர்
Kalaikkathir

## மக்கள்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

தேர்தலைநடத்தாமல்அதிகாரத்தில் இருக்க தயாராகினால் உலக வரலாற்றில் இடம்பெறுகின்ற மிகப்பெரிய மக்கள் எழுச்சியை ரணில் விக்கிரசிங்கவால் தடுக்க முடியாமல்போய்விடும்.

வரலாற்றில் இற்றைவரை அதிகாரம் கைமாறிய விதம் மாற்றமடைந்து பொதுமக்களின் இயக்கமானதேசியமக்கள்சக்திக்கு அதிகாரம் கைமாறி வருவதால் ஆட்சியாளர்கள் இப்போது பதற்றமடைந்திருக்கிறார்கள். ஒன்றுசேரக்கூடிய அனைவருமே தற்போது ஒன்றிணைந்து வருகிறார்கள்.

இரண்டுகோப்பைகளில்உள்ள புறூட்செலட்டைஒரேகோப்பையில் போட்டுக்கொள்ள தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இற்றைக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கபீர் ஹசீமின் வீட்டில் ராஜித சேனாரத்னவுடன் ஐ.ம.ச. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதினைந்து பேர் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இரண்டாகப் பிரிந்து போட்டியிட்டால் என்.பி.பி. வெற்றிபெறும். அது அபாயமாம். அதனால்தான் இந்த இரு தரப்பினரும் மீண்டும் இணைய இருக்கிறார்கள்.

ஊழல் பேர்வழிகளுக்கு குற்றச்செயல் புரிந்தவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவது ஆபத்தானதாகும். அதனால் இரகசிய பேச்சு நடாத்தப்பட்டுள்ளது. இந்ததரப்புகள் இரண்டும்இரண்டாகமுன்வருவது பயங்கரமானது, அதனால்ஒன்றாக ஒன்றுசேர பேச்சு நடத்தப்படுகிறது.

பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் கீரியும் பாம்பும் அடித்துச்செல்லப்படும். ஒருதுண்டு மரக்கட்டை அகப்பட்டால் கிரியும் பாம்பும் அதில் ஏறும். ரணிலும் மகிந்தவும் ஒரே கட்டைத்துண்டில் ஏறியிருக்கிறார்கள். இந்தவெள்ளம் என்ன?

தேசிய மக்கள் சக்தியுடன் அணிதிரண்ட மாபெரும் மக்கள் வெள்ளம் இருக்கிறது. அவர்கள் அனைவரையும்ஒரேமேடையில் ஏறுமளவுக்கு நிர்ப்பந்தித்துள்ளது. இலங்கை வரலாற்றில் எல்லா ஜனாதிபதிகளும்ஒன்றாகஏறுகின்ற மேடையைநாங்கள்சந்திக்கிறோம்.

சந்திரிக்கா, மகிந்த, மைத்திரி, கோட்டாபய , ரணில் ஆகியோரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரே மேடையில் சந்திக்கலாம். அவர்கள் 1994 இல் இருந்து 2024 வரை 30 வருடங்களாக பிரிந்து இருந்த குழுவினராவர். ஒருவருக்கொருவர் எதிராக ஆயுதம் தரித்து நின்றவர்களாவர். ஆனால் இன்று ஒரே மேடையில் ஏறவேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

அவர்களின் அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மேற்கொள்ளக்கூடிய அனைத்து விதமான வழிமுறைகளையும் மேற்கொண்டுவருகிறார்கள். ஊடக அலைவரிசைகளின் நடத்தைகள் சாதாரணமான காலங்களுக்கு அப்பால் சென்றுள்ளன. செய்தித்தாள்களைவாசிக்கும்போது அதில் உள்ளவற்றைவிட அதிகமாக வாசிக்கின்ற நிலைமை அதிகரித்துள்ளது.

மென்மேலும் மக்களின் நம்பிக்கை ஈடுபாடுகளை உறுதிசெய்து கொள்வதுதான் வெற்றிக்காக எமக்கிருக்கின்ற ஒரே பாதை. ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் இந்தச் சந்திப்பிற்கு வந்திருப்பதன் மூலமாக அந்த ஈடுபாட்டினை நம்பிக்கையை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கத்தயார் என்பதையே பறைசாற்றுகின்றது. அதற்காக இடையீடு செய்வோம் என உங்களுக்குஅழைப்புவிடுக்கவே நாங்கள் வந்திருக்கிறோம்.

எங்கள் நாட்டுக்கு என்ன நேர்ந்துள்ளது? பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்த, பெரும்குற்றச்செயல்கள்நிறைந்த, சட்டத்தின் ஆட்சி முற்றாகவே சீரழிந்த, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே அச்சம், அவநம்பிக்கை, குரோதம் வளர்ச்சியடைந்த, அடிமட்டத்திலேயே இருக்கின்ற மக்களுக்கு முறையான உணவை பெற்றுக்கொள்ள முடியாத, வைத்தியசாலையில் மருந்து மாத்திரைகள் இல்லாத, இளைஞர்களின் எதிர்காலம் முற்றாகவே அழிக்கப்பட்ட, கல்வி நாசமாக்கப்பட்ட, போதைப் பொருட்கள் நிறைந்த ஒரு தேசம் எம்மெதிரில்உருவாக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டு மக்களும் தாய்நாடும் அனுபவிக்கின்ற கவலைக்கிடமானநிலைமைஎமது இதயங்களால்உணரப்படுமாயின், எமது பிரஜைகளின் வேதனைகள் எமதுசெவிகளுக்குகேட்குமானால், இதயம்படைத்த மனிதர்களாயின் எம்மெவருக்கும் இந்த நிலைமையின் மத்தியில் பாராமுகமாக இருக்கின்ற தார்மீக உரிமை கிடையாது. நாம் அனைவரும் செய்யக் கூடிய அனைத்தையுமே புரிந்து இந்த மாற்றத்தை அடைவதற்கான முன்னோடி செயற்பொறுப்பின் பங்காளிகளாக மாற வேண்டும் அதற்காக உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம் -- என்றார்.

## இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்போராட்டத்தின் பின்னரும் தமக்கு விரைவில் தீர்வு கிடைக்காவிடில் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடவுள்ளனர் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தத்த மீனவர் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் சிறீ கந்தவேல் புனித பிரகாஸ் இது தொடர்ல் தெரிவித்ததாவது:

இந்திய இழுவை மடி படகுகளின் அத்துமீறல் எமது கடற்பகுதிகளில் மீண்டும் தொடங்கிவிட்டது. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெருமளவு பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 10 மணிக்கு இந்திய துணைத் தூதரகத்திற்கு முன்பாக போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், துறைசார்ந்த திணைக்களங்கள் விரைந்து செயற்பட்டு இந்திய இழுவை மடி படகுகளை கட்டுப்படுத்தவேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிட எமது அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன என்றார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமியஅமைப்புகளின்சம்மேளன தலைவர்செல்லத்துரைநற்குணம் தெரிவித்ததாவது:

இந்தியஇழுவைமடிகடற்றொழிலாளர்களின் அத்துமீறலால் எமது மக்கள் வீதிக்கு வந்து பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிவரும். சிறுவர் தொடங்கி பெரியவர் வரை இதன் மூலம் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

இதற்கெதிராகஇலங்கைஆளும் தரப்பு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித நேயத்துடன் இந்திய மற்றும் தமிழக ஆட்சியாளர்கள் செயற்படவேண்டும். இந்தியாவின் மிலேச்சத்தனமாகவே இதனைப் பார்க்கிறோம்.

இந்திய துணைத் தூதரகத்தின் முன்பாக செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்தில் பங்கேற்கஅனைத்துகடற்றொழிலாளர்களையும் அழைக்கின்றோம் என்றார்.

# விபத்தில் ஒருவர் சாவு கிண்ணியாவில் சம்பவம்




இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணி அளவில் மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியின் வெள்ளை மணலில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கிண்ணியா ஜித்தா நகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹம்மது நசுறுல்லாஹ் 43 வயது என்பவர் ஆவார்

கிண்ணியாவில் இருந்து குச்சவெளிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவரும், திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்தவருமே நேருக்கு நேர் மோதி உள்ளார்கள்.

உயிரிழந்தவரின் சடலம் கிண்ணியா தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

காயத்துக்குள்ளானவர் கிண்ணியா தள வைத்தியசாலையில் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனகுடா பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# ஐகாஸ் உயர் கல்வி நிறுவனத்தின் இரண்டாவது பொதுப் பட்டமளிப்பு!



(தில்சாத் பர்வீஸ்)

ஐகாஸ் உயர் கல்வி நிறுவனத்தின் இரண்டாவது பொது பட்டமளிப்பு விழா ஐகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் செய்னுலாப்தீன் முஹம்மட் ஹக்கீம் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிக விமரிசையாக சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்வருட பட்டமளிப்பு விழாவில் 100 இற்கு மேற்பட்டவர்கள் தமது பட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக இலங்கை, இரத்மலானை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியும், நிலைத்தன்மை தொடர்பான பல்கலைக்கழக குழுவின் தலைவருமான பேராசிரியர் பிரசன்ன பிரேமதாச, மற்றும் சிறந்த சமூக மற்றும் சர்வதேச கல்வியியலாளர்கள் சங்களுக்கான உலகளாவிய முன்னோடிகளின் தீர்வுக்கான தலைவர் டாக்டர் கேரி கோல்ஸ்டன் கலந்து சிறப்பித்தார்களஅ.;

மேலும், இவ்விழாவில் பல்வேறு மூத்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வித் தலைவர்கள், கௌரவ விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (05)

# போதைப் பொருளுக்கு எதிராக கிளிநொச்சியில் கவனவீர்ப்பு








போதைப்பொருள் அற்ற சமூகத்தை உருவாக்குவோம்என்றதொனிப்பொருளில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய பழைய மாணவர்களால் கவனவீர்ப்பு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பாரதிபுரம் சூசைப்பிள்ளையார் சந்தியிலிருந்து பாடசாலை மைதானம் வரை குறித்த கவனவீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (05-113)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜமால்தீன் ஞாபகார்த்த கிறிக்கெட்



(பாறுக் ஷிஹான்)

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மர்ஹூம் எச். எல். ஜமால்தீன் ஞாபகார்த்தமாக வருடா வருடம் நடைபெறும்கிறிக்கெட்சுற்றுப்போட்டி இவ்வருடமும் மருதமுனை மசூர் மௌலான விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் மருதமுனை யுனிவேர்ஸ்விளையாட்டுகழகத்தை எதிர்த்து மருதமுனை பென்ஸீன் விளையாட்டு கழகம் போட்டியிட்டு வெற்றி வாகை சூடியது.

மர்ஹூம்எச்எல்ஜமால்தீன்எஸ் எஸ் பி பவுண்டேசனின் தலைவர் எச் எல் நஜிமுத்தீன் தலைமையிலும் மருதமுனை கிறிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் யூ எஸ் சமீம் ஆசிரியரின் இணை தலைமையிலும் நடைபெற்ற இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே எம் ஜவாத்தும் கௌரவ அதிதியாக மையோன் குறூப் நிறைவேற்று பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபாவும் விசேட அதிதிகளாக கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர் வை கே றஹ்மான் மற்றும் சிரேஷ்ட திடீர் மரண விசாரனை அதிகாரிகளான எம் ஐ நஸ்றுல் இஸ்லாம் மற்றும் ஏ எச் அல் ஜவாஹிர், டைடம் நிறுவன பணிப்பாளர்நஸ்மிமீராமுஹைதீன், கணிய அளவையாளர் வஸீம் சஜாத் மற்றும் தேசிய புத்தாக்க நிறுவனத்தின் உதவி பணிப்பாளக் நுஸைக் முப்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

போட்டிகள் மற்றும் இறுதி நாள் நிகழ்வை அமைப்பின் செயலாளர் யூ எஸ் சபீல் மற்றும் அமைப்பின் பொருளாளர் ஏ எம் எம் றஜி ஆகியோர் நெறிப்படுத்தி இருந்தனர். (05)

# சமூக நல உதவும் கரங்கள் அமைப்பின் பட்டமளிப்பு



(பாறுக் ஷிஹான்)

சர்வதேசதேவமகிமைஊழியங்களின் சமூக நல உதவும் கரங்கள் அமைப்பு நடத்திய டிப்ளோமா மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் பட்டமளிப்பு விழா கல்முனையில் இடம்பெற்றது.



தேவ மகிமை ஊழியங்களின் சமூகநலஉதவும்கரங்கள்அமைப்பால் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை கெல்முனை கானான் திருச்சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு பிரதம அதிதியாக தேவ மகிமை ஊழியங்களின் சமூக நல உதவும் கரங்கள் அமைப்பின் ஸ்தாபகரும் தலைவருமான ஜீவா சுப்ரமணியம் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன்,பயிற்ச்சியைநிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ்களையும் பட்டத்தையும் வழங்கி வைத்தார்.

அதிதிகள்மங்களவாத்திய இசை முழங்க அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து, பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

தேவ மகிமை ஊழியங்களின் சமூகநல உதவுங்கள் அமைப்பால் இளைஞர்யுவதிகளின்எதிர்காலத்தை கருதிக் கொண்டு ஆரீ பயிற்சி, தையல் பயிற்சி, வர்ண கேக், சமையல் கலை பயிற்சி, கணணி பயிற்சி, கையடக்க தொலைபேசி திருத்துனர் பயிற்சி, இசைக்கலை பயிற்சி, ஆங்கிலமொழிவகுப்புக்கள், பரயோக வகுப்புக்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான டிப்ளோமா மற்றும் சேர்ட்டிபிக்கேட் அனைத்து நெறிகளும் முற்றிலும் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த 85 யுவதிகளுக்கு இதன் போது டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தேவ மகிமை ஊழியங்களின் குறித்த சமூக நல உதவுங்கரங்கள் அமைப்பானது தொடர்ச்சியாக தேசிய ரீதியில் நலிவுற்ற மக்கள் மற்றும் இளைஞர் யுவதிகளை வலுப்படுத்திவளப்படுத்தும்நோக்கில் பல்வேறுபட்ட உதவி திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமையும்குறிப்பிடத்தக்கது. (05)

# சுயமதிப்பீட்டுப் பயிற்சி கருத்தாக்கம்





(ஹஸ்பர் ஏ.எச்)

அறிவு ஒளி மையத்தில் பயன் பெறும் மாணவர்கள் தங்களைத்தொடர்ந்துமேம்படுத்துவதற்குத்தேவையான கருவிகள் மற்றும் மனநிலையுடன் சித்தப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சுய-மதிப்பீட்டுப் பயிற்சி மற்றும் மேம்பாட்டை மையமாகக் கொண்ட ஒரு கருத்தாக்கம் ஒன்று ஞாயிற்றுக்கிழமைதிருக்கோணமலைநகரசபை நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட திருகோணமலை செயலாளர் இராஜசேகர் நகர சபையினது சேவை மற்றும் அதனோடு இணைந்து இந்த மக்களது பங்கு இளைய சமுதாயத்தின் தேவை என்பனவற்றை எடுத்துரைத்தார்.

இந்தக் கருத்தாக்க நிகழ்வை வழிநடத்தி வளவாளர் கணேஷ் சிறப்பான முறையில் மாணவர்களது விருத்தியை மேல்நோக்கும் விதமாக செயற்படுத்தினார்.

இந்த நிகழ்வின் இறுதியில் அறிவு ஒளி மைய பணிப்பாளர் உதயகுமார் அஜித் குமார், மாணவர்களது தேவைகள் சிலவற்றை அடுத்து வரும் மாணவர் மன்றக் கூட்டத்தில் செய்து தருவதாக உறுதியளித்தார். மேலும் இந்த நிகழ்வை முழுவதுமாக அறிவு ஒளி மையத்தின் நிர்வாகச் செயலாளர் டிலக்ஷிகா புகழ்வேந்தன் அவர்கள் ஒழுங்கமைத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# திடீரென வீதியில் மயங்கி விழுந்த மாணவன் சாவு

வீதியில் மயங்கி விழுந்த, தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவன் ஒருவர் பரிதாபமாக ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். தொல்புரம் பகுதியைச் சேர்ந்த தவராசா கோபிக்குமரன் என்ற 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் -

குறித்த மாணவன் அவரது நண்பருடன் ஞாயிறு மதியம் கடைக்கு சென்று உள்ளார். இதன் போது சுழிபுரம் சந்திக்கு அருகில் திடீரென மயங்கி விழுந்துள்ளார். இந்நிலையில் குறித்த மாணவனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்த வேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளைதிடீர்மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

குறித்த மாணவனுக்கு இதய வால்வில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாகவே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற் கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.(05)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமானம்

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா, ஈச்சந்தீவு, குஞ்சி முகம்மது ஹாஜியார் வீதி என்ற முகவரியில் வசிக்கும் அபுசாலிபு முகம்மது முஜாஹித், தீவு முழுவதற்குமான ஒரு சமாதான நீதிவானாகதிருகோணமலைமாவட்ட நீதிமன்றநீதிபதி எம்.கணேஷராஜா முன்னிலையில் 2024-05-16 ஆம் திகதி வியாழக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக ஆர்வலராக இருக்கும் இவர் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. உயர் தரம் வரை தி/கிண்ணியா அல் அக்ஸா கல்லூரியிலும் கலைமானி பட்டத்தை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை இலங்கை திறந்தபல்கலைக்கழகத்திலும், உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாவை இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திலும் சிங்கள டிப்ளோமாவை இலங்கை களனிப் பல்கலைக்கழகத்திலும் கற்றுள்ளார்.

தற்போது திருகோணமலை வெள்ளை மணல் அல் அஸ்ஹர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரண்டாம் மொழி (சிங்களம்) ஆசிரியராக பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிகழ்வு







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.



ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே தடவையில், குறிக்கப்பட்ட உரிய நேரத்தில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள் உட்பட சிறுவர்களும் தொழுகையில் கலந்து கொண்டனர்.(05)

# சுகாதார நிலையம் திறந்துவைப்பு



(கே எ ஹமீட்)

மூதூர் பெரியபாலத்தில் 16 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமோதய சுகாதார நிலையத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்துவைத்ததுடன், மக்கள்பாவனைக்காககையளித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கபிலநுவான்அதுகோரல உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.(05)





காலைக்கதிர்
Kalaikkathir

# மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நிகழ்வு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அல்ஹாஹஜ்ஜுப்பெருநாள்தொழுகைநேற்று(திங்கட்கிழமை) காலை 6.15 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்தவெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் கலாநிதி எம்.எல். முபாறக் (மதனி) நடத்தினார். ஆண்கள், பெண்களுக்கு வௌ;வேறாக இட வசதிகள் ஒதுக்கப்பட்டு தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன் மண்ணில் அப்பாவி சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து இந்த ஹஜ்ஜுப்பெருளாள்



தினத்தில் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என இங்கு குத்பா பிரசங்கத்தை நிகழ்த்திய மௌலவி பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.(05)

# 702 கிலோ பீடி இலைகளுடன் இருவர் புத்தளத்தில் கைது

சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 702 கிலோ கிராம் நிறையுடைய பீடி இலைகளுடன் இரு சந்தேக நபர்கள் புத்தளம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை புத்தளம் பகுதியில் கடற்படையினரால் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .


இவர்களிடமிருந்து சுமார் 702 கிலோ கிராம் நிறையுடைய பீடி இலைகள் , இந்த பீடி இலைகளை மற்றொரு இடத்திற்கு கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்ட ஓட்டோ என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 42 மற்றும் 44 வயதுடைய மன்னார் மற்றும் மதுரங்குளி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் .

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் , கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் ஓட்டோவுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மதுவரி திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(05)

# ஈபிஆர்எல்எவ் தியாகிகள்தினம் அம்பாறையில் அனுஷ்டிப்பு



(சலீம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 34 ஆவதுதியாகிகள்தினம்அம்பாறைமாவட்த்தில்எதிர்வரும் புதன்கிழமை பரவலாக அனுஷ்டிக்கப்படவிருகின்றது.

இம்முறை தியாகிகள் தினநிகழ்வுகள் பெரும்பாலும் பெருநிகழ்வுகளாகஇடம்பெறாதுஉணர்வுபூர்வமாகவும், அமைதியான முறையிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட இணைப்பாளருமான சிவசுந்தரம் புண்ணிய நாதன் (கரன்) தெரிவித்தார்.

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணிஒவ்வொரு வருடமும் ஜுன் மாதம் 19 ஆம் திகதி தியாகிகள் தினத்தை ஈழப் போராட்டத்திற்காக உயிர்த்தியாகம் செய்த அனைத்துப் போராளிகளையும், பொதுமக்களையும் நினைவு கூர்ந்து அனுஷ்டித்து வருகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை தலைமையேற்று வழி நடத்திய செயலாளர் நாயகமும், தென்னிலங்கை மற்றும் சர்வதேச முற்போக்கு இடதுசாரி சக்திகளுடன் உறவுகளைப் பேணிவந்த மக்கள் நேய மனிதாபிமானப் போராளி தோழர் பத்மநாபாவும் மற்றும் 13 தோழர்களும் தமிழகத்தில் ஒரே இடத்தில் ஒரே நாளில் படுஜஜுகலை செய்யப்பட்ட தினத்தையே, உயிர்த்தியாகம் செய்த அனைத்துப் போராளிகளையும், பொது மக்களையும் நினைவு கூரும் தியாகிகள் தினமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன்படி வழமை போன்று பெருநிகழ்வாக அல்லாது அமைதியான ஆடம்பரமற்றவையாகவும், உணர்வுபூர்வமாகவும் அம்பாறை மாவட்டத்தில் தியாகிகள்தினஅஞ்சலிநிகழ்வுகள்இடம்பெறவுள்ளனஎன மாவட்ட இணைப்பாளர் சிவசுந்தரம் புண்ணியநாதன் (கரன்) தெரிவித்தார்.

தியாகிகள் தினம் தொடர்பில் மாவட்ட இணைப்பாளர் புண்ணிய நாதன் (கரன்) விடுத்துள்ள அறிக்கையில் -

'தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்காக தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுத்து தோழர் பத்மநாபா, மக்களின் விடிவுக்காக தமது 39 ஆவது வயதிலேயே எமது ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி எனும் பேரியக்கத்தைக் கட்டியெழுப்பினார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படியான 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் கிடைத்த இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையை அவர் தீர்க்க தரிசனமாக ஏற்றுக்கொண்டார்.

ஆனால் நமது மிதவாத தலைவர்களும், ஆயுதக் குழுக்களும் இந்த முடிவுக்கு ஆதரவு வழங்கவில்லை.

அவ்வாறு அன்று அவரது முடிவை ஏற்றிருந்தால் எம்மக்கள் கண்ட முள்ளிவாய்க்கால் பேரழிவையே தடுத்திருப்பதுடன், சமஷ்டியை அடையும் தூரத்திற்கும் வந்திருக்க முடியும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# அரசு தரும்10 கிலோ இலவச அரிக்கு சமுர்த்தி அலுவலர்கள் பண அறவீடு

## வவுனியாவில் மக்கள் குற்றச்சாட்டு

ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமையவறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி பொதி வழக்கும் செயற்திட்டத்தின் போது வவுனியாவில் சில சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பணம் அறவிடுவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து குறைந்த வருமானம்பெறும்குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தை பேணு வதற்காகஜனாதிபதியின்திட்டத்திற்கு அமைய தேசிய வேலைத்திட்டம் நாடுபூராகவும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில 10 கிலோ அரிசி பொதிகள் கடந்த சில நாட்களாக மக்களுக்கு வழங்கும் போது எந்தவித சிட்டைகளும் இன்றி சமுர்த்திஉத்தியோகத்தர்களால்1000 ரூபா முதல் 500 ரூபா வரை பணம் அறவிடப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளதுடன், இதனால் பணம்செலுத்த முடியாத நிலையில் சிலர் உரிய காலப்பகுதியில் அரிசி பொதியைபெறவில்லைஎன்பதுடன், மற்றும் சிலர் பிறரிடம் கடன்பெற்று பணம் செலுத்தியே அரிசி பொதியை பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட சில பகுதிகளில் பல்வேறு தொகைகளில் இவ்வாறு பணம் பெறப்படுவதாகவும் 500- 1000 ரூபா வரை பணம் செலுத்தியே 10 கிலோ அரிசியை பெறவேண்டியுள்ளதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் மற்றும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பாகும். (05 - 100)

# புத்தளம் மக்களுக்கு டெப் வசதி கிட்டியது



(எம் சியாஜ் )

புத்தளம் ரத்மல்யாய அரபா மஸ்ஜிதுக்கானவுழுசெய்வதற்கான சம்பூர்ணமான டெப் வசதிகளை முழுயாக ஏற்படுத்திக் கொடுத்தார் முஸ்லிம் செரன்டிப் நிதியத்தின் பணிப்பாளரும் நீதி அமைச்சின் மத்தியஸ்த சபை அதிகாரியும், சமூக ஆர்வலருமான முஜாஹித் நிசார்.

முழுமையாகஅமைக்கப்பட்டநீர் தாங்கி, தண்ணீர் மோட்டர் மற்றும் வுழு செய்வதற்கான டெப் வசதிகள் என்பன கடந்த சனிக்கிழமை அரபா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவி மபாஸ் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில்முஸ்லிம்செரன்டிப் நிதியத்தின் பணிப்பாளரும் ,நீதி அமைச்சின் மத்தியஸ்த சபை அதிகாரியும், சமூக ஆர்வலருமான முஜாஹித் நிஸார் , பிரதேச இணைப்பாளரும், சமூக சேவையாளருமான உவைஸ் , புத்தளம் முன்னால் உப நகர பிதா ஏ.ஓ அலிகான் , பள்ளி நிர்வாகிகள், என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

## பல்கலை அனுமதிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

(கே எ ஹமீட்)

அண்மையில் வெளியான 2023ஆம்ஆண்டுக்கானக.பொ.த. உயர்தரபரீட்சைபெறுபேறுகளுக்கு அமைவாக இலங்கையின் அரச பல்கலைக்கழக இளமாணிக் கற்கைநெறிகளிற்குபல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழுஇனால் 2023ஃ24 கல்வியாண்டுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கொன்று சம்மாந் துறை நலனுக்கும் அபிவிருத்திக் குமான பேரவையின் பங்களிப் புடனும் சம்மாந்துறை இளமா ணிப்பட்டதாரிகள் அமைப்பின் ஏற்பாட்டிலும் அல்-மர்ஜான் முஸ்லீம் மகளிர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் வளவாளர் களாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ.சிப்லியும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீட விரிவுரையாளர் எம்.பர்விஸூம் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் அறிமுக உரை யினை சம்மாந்துறை இளமாணிப் பட்டதாரிகள்அமைப்பின்தலைவரும் மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவருமான எம்.எஸ்.ஹினாஸ் அஹமட் நிகழ்த்தியதுடன் மேலும் உரையில் 'இதன்தொடர்ச்சியாகஎதிர்வருகின்ற நாள்களில்நிகழ்நிலைவிண்ணப்பம் நிரப்பும் நிகழ்வானது

அத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த இளம்பட்டதாரி மாணவர்களால் இலவசமாக வழங்கி வைக்கப்படும் எனவும் கூறியிருந்தார்.

இக்கருத்தரங்கில்2023ஃ2024 கல்வியாண்டிக்கானபல்கலைக்கழக கற்கைநெறிகளிற்குவிண்ணப்பிக்க எதிர்பார்த்துள்ள மாணவர்கள் கலந்துகொண்டனர். (05)

## மட்டக்களப்பில் நேற்று ஆணின் சடலம் மீட்பு

மட்டு. விவேகானந்தபுரம் ஆயிரம்கால் மண்டப வீதியில் உள்ள வாய்க்காலில் சடலம் இருப்பதைக் கிராமவாசிகள் கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து குறித்து இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டு மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்தனர்.

இந்த விசாரணையின் போது வெல்லாவெளி விவேகானந்தபுரம் கிராமத்தைச்சேர்ந்த64வயதுடைய 6 பிள்ளைகளின் தந்தையான பிள்ளையான்குட்டி புலேந்திரன் என சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் யானை தாக்கி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப் படுவதாகவும் இதன்போது வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீட்டிலிருந்து புறப்பட்டு ஆயிரம்கால் மண்டப வைரவர் ஆலயத்திற்குச் சென்று வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் அவரைத் தேடி வந்துள்ளனர் இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2024இல் வெளியிடப்பெற்றது